வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු

விலை ரூ. 30/=




Email : eelanaduweekly@gmail.com மலர் : 07 02.06.2026 செவ்வாய்க்கிழமை இதழ் : 147 பக்கங்கள் : 08

## நீதிபதியின் இடமாற்றத்தில் ஆளுநருக்கு தொடர்பில்லை!

### வடக்கு ஆளுநர் செயலகம் விளக்கம்

யாழ்ப்பாணம், ஜூன். 02

யாழ்ப்பாண மேல் நீதிமன்றின் நீதிபதி ஏ.ஜி. அலெக்ஸ்ராஜாவின் இடமாற்றத்துக்கும், வடக்கு மாகாண ஆளுநருக்கும் எந்தவொரு தொடர்பும் கிடையாது என வடக்கு மாகாண ஆளுநர் செயலகம் அறிவித்துள்ளது.

குறித்த நீதிபதியின் இடமாற்றத்துக்கும் வடக்கு மாகாண ஆளுநருக்கும் தொடர்பு இருப்பதாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

அது தொடர்பிலேயே வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தால் இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டது.

இது தொடர்பில் சமூகத்தில் எழக்கூடிய தேவையற்ற ஊகங்களைத் தவிர்க்கும் பொருட்டும், உண்மை நிலைமையைப் பொதுமக்களுக்குத் தெளிவுபடுத்தும் வகையிலுமே ஆளுநர் செயலகத்தால் இந்த அறிவிப்பு வெளியிடப்படுகின்றதாக ஆளுநர் செயலகத்தால் தெரிவிக்கப்படுகிறது. (அ-05)

மத்திய வங்கி பிணை முறி மோசடி விவகாரம்;

## குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக பொது சொத்து சட்டத்தின் கீழ் வழக்கு!

### உயர் நீதிமன்றம் அதிரடி உத்தரவு

கொழும்பு, ஜூன் 01

**மத்திய வங்கி பிணைமுறி மோசடி வழக்கு தொடர்பில் உயர்நீதிமன்றம் நேற்று அதிரடி உத்தரவு ஒன்றை பிறப்பித்துள்ளது.**

பிணை மோசடி தொடர்பில் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக பொதுச் சொத்துச் சட்டத்தின் கீழ் குற்றச்சாட்டுகளைத் தொடர முடியும் என அது அறிவித்துள்ளது.

கடந்த 2021ஆம் ஆண்டு பொதுச் சொத்துக்கள் சட்டத்தின் கீழ் பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கு தொடர முடியாது என மேல்நீதிமன்றின் தீர்ப்பை உயர் நீதிமன்றம் நேற்று இரத்து செய்துள்ளது.

பிரதம நீதியரசர் பிரித்தீ பத்மன் சூரசேன, நீதியரசர்களான ஏ.எல். ஷிரான் குணரத்ன, அசல வெங்கப்புலி மற்றும் அர்ஜுன ஒபயசேகர ஆகியோரின் இணக்கத்துடன் நீதியரசர் மகிந்த சமயவர்தன இந்த உத்தரவை வழங்கினார்.

பெர்பெச்சுவல் ட்ரஷரீஸ் லிமிடெட் நிறுவனம் மற்றும்

07

## சாலேயின் தடுப்புக்காவல் மேலும் 90 நாள்கள் நீடிப்பு!

### ஜனாதிபதி அநுர உத்தரவு

கொழும்பு, ஜூன். 02

அரச புலனாய்வு சேவையின் முன்னாள் தலைவரான ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் துவான் சுரேஷ் சாலேயை, மேலும் 90 நாள்கள் குற்றப்புலனாய்வுப் பிரிவின் கீழ் தடுப்புக்காவலில் வைப்பதற்கு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

2026 மே 27 திகதியிட்ட தடுப்புக் காவல் உத்தரவைப் பிறப்பித்த ஜனாதிபதி, 1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க பயங்கரவாதத் தடுப்பு

07

## ஆசிரியர் போட்டிப் பரீட்சை மூலம் 44 கோடி ரூபா இலாபமீட்டிய அரசு!

### தயாசிறி ஜயசேகர சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூன். 02

அரசாங்கப் பாடசாலைகளுக்கு 23,000 ஆசிரியர்களை இணைத்துக் கொள்வதற்காக அண்மையில் நடத்தப்பட்ட ஆசிரியர் போட்டிப் பரீட்சை மூலம் அரசாங்கம் பரீட்சார்த்திகளிடமிருந்து சுமார் 44 கோடி ரூபாய்க்கும் அதிகமான தொகையை இலாபமாக ஈட்டியுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த முறை பரீட்சைக்குத் தோற்றிய பரீட்சார்த்திகளிடம் இருந்து பரீட்சைக் கட்டணமாக சுமார்

07

## எபோலா, மூளைக்காய்ச்சல் பரவல் தயார் நிலையில் உள்ளது இலங்கை!

### சுகாதார அமைச்சர் நளிந்த தகவல்

கொழும்பு, ஜூன். 02

உலகளவில் பரவி வரும் எபோலா வைரஸ் மற்றும் இலங்கையில் பரவி வரும் மெனிஞ்சைடிஸ் எனப்படும் மூளைக்காய்ச்சல் நோய் நிலைமைகள் குறித்து சுகாதாரப் பிரிவினர் தீவிர கவனம் செலுத்தியுள்ளதாக சுகாதார மற்றும் ஊடகத்துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த அமைச்சர், நாட்டில் பரவி வரும் மெனிஞ்சைடிஸ் நோயைக் கட்டுப்படுத்துவதற்குச் சுகாதாரப் பிரிவினர்

07

## அனுமதியின்றி தேர்தல் நிதி பயன்பாடு? உடனடியாக விசாரணை நடத்தவேண்டும்

### கோப் குழுவிடம் மனோ கணேசன் கோரிக்கை

கொழும்பு, ஜூன். 02

மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்காக ஒதுக்கப்பட்ட நிதி, வேறு தேவைகளுக்காக மறுஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதா என்பது குறித்து பாராளுமன்ற அரச நிதி பற்றிய குழு விசாரணை நடத்த வேண்டும் என தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக, பாராளுமன்ற அரச நிதி பற்றிய குழுவின் தலைவர் ஹர்ஷ டி சில்வாவுக்கு, நேற்று திகதியிட்டு மனோ கணேசன் அனுப்பியுள்ள கடிதத்தில்,

மாகாண சபைத் தேர்தல்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதி, அரசாங்கத்தினால் அனர்த்த மறுசீரமைப்பு மற்றும் அதனுடன் தொடர்புடைய நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளதாக மக்கள் விடுதலை

07

## ரூ.10 கோடிக்கு மேற்பட்ட பணத்துடன் வவுனியாவில் வர்த்தகர் தலைமறைவு!

### குற்றப் புலனாய்வுப் பிரிவில் முறைப்பாடு

வவுனியா, ஜூன். 02

வவுனியாவில் 10 கோடி ரூபாவுக்கு மேற்பட்ட பணத்துடன் வர்த்தகர் ஒருவர் குடும்பத்துடன் தலைமறைவாகியுள்ளார் என கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவு பொலிஸில் முறைப்பாடு செயயப்பட்டுள்ளது.

வவுனியா, குட்செட் வீதி, அம்மா பகவான் ஒழுங்கையில் வசித்து வந்த கௌரி யுவலர்ஸ் என்னும் பெயரில் நகைக் கடை நடத்தி வந்த வர்த்தகரே 10 கோடி ரூபாய்க்கு மேற்பட்ட பணத்தை பல வர்த்தகரிடம் கடனாகப் பெற்றுக் கொண்டு குடும்பத்துடன் நாட்டை விட்டு தப்பிச் சென்றுள்ளார்.

இது தொடர்பில் பாதிக்கப்பட்ட நகைக் கடை உரிமையாளர் ஒருவர் கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவு பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

07

## பொருளாதார நட்ட சுமையை மக்கள் மீது திணிக்கிறது அரசு

### நாமல் ராஜபக்ஷ குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன். 02

ஊழல்களால் ஏற்பட்ட பொருளாதார நட்டத்தின் சுமையை அரசாங்கம் மக்களின் மீது திணித்து வருவதாக பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

எரிபொருள் விலை உயர்வு மற்றும் நாட்டின் தற்போதைய அரசியல் நிலைமைகள் குறித்து ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த காலங்களில் எரிபொருள் விலை உயர்த்தப்படும்போது அமைச்சர்களுக்குக் கொமிஷன்

07

## மாகாண சபை தேர்தலை உடனடியாக நடத்துங்கள்!

### ஆளுநர்கள் சங்கம் அரசிடம் கோரிக்கை

கொழும்பு, ஜூன். 02

மாகாண சபை தேர்தலை உடனடியாக நடத்த வேண்டும் என ஆளுநர்களின் சங்கம் அரசாங்கத்திடம் வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக அந்த சங்கம் விசேட அறிக்கை ஒன்றையும் வெளியிட்டுள்ளது.

தேர்தல் நடத்தப்படாமல் ஆளுநர்களின் ஆட்சியின் கீழ் மாகாண சபைகளை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வது, மாகாண நிர்வாகம் வீழ்ச்சியடைவதற்குக் காரணமாக அமைந்துள்ளதால், தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் உடனடியாக

07

## 3 மாதங்களில் 5 தடவைகள் உயர்ந்த எரிபொருள் விலை!

கொழும்பு, ஜூன். 02

இலங்கையில் கடந்த மார்ச் மாதம் முதலாம் திகதி முதல் மே மாதம் 31ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் ஐந்து தடவைகள் எரிபொருள் விலைகள் திருத்தியமைக்கப்பட்டுள்ள நிலையில், அனைத்து பிரதான எரிபொருள்களின் விலைகளும் நடப்பு ஆண்டில் மிக உயர்ந்த மட்டத்தை எட்டியுள்ளன.

மத்திய கிழக்கில் நிலவும் பதற்ற நிலை மற்றும் உலகளாவிய எரிசக்தி சந்தையில் ஏற்பட்டுள்ள ஏற்ற இறக்கங்கள் காரணமாக, கடந்த மூன்று மாதங்களில் இலங்கையின் எரிபொருள் விலை சூத்திரத்துக்கு அமைவாக இந்த விலை அதிகரிப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வடமராட்சிக் கடலில் காணாமற்போன மீனவர்களை தேடும் பணி தொடர்கிறது

## அவர்களின் வரவுக்காக காத்திருக்கும் குடும்பங்கள்

யாழ்ப்பாணம், ஜூன். 02

பருத்தித்துறைப் பகுதியில் இருந்து கடந்த புதன்கிழமை இரவு கடலுக்கு சென்ற நான்கு மீனவர்கள் இதுவரை கரை திரும்பவில்லை. இவர்களைத் தேடும் பணி நான்காவது நாளாகவும் முன்னெடுக்கப்பட்டது.

கடற்படையின் படகுகள் மற்றும் மீனவர்களின் படகுகள் இணைந்து தேடுதலில் ஈடுபட்டன.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தந்தை, மகன் மற்றும் இரண்டு குடும்பத்தைச் சேர்ந்த மேலும் இருவருமாக நால்வர் கடந்த புதன்கிழமை இரவு 12 மணிக்கு தொழிலுக்காகக் கடலுக்குச் சென்றனர்.

இவர்கள் நால்வரும் இதுவரை வீடு திரும்பவில்லை. பல்வேறு வழிகளில் தேடுதல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

காணாமற்போனவர்களை கண்டறிவதற்கு கடற்படையினரின் உதவியும் கோரப்பட்டுள்ள நிலையில் குடும்பங்கள் தமது உறவுகளை எதிர்பார்த்தவாறு காத்திருக்கின்றனர். (அ)

# எரிபொருள் கியூ.ஆர். முறை மேலும் கடுமையாக்கப்படும்

## அமைச்சர் அநுர கருணாதிலக

கொழும்பு, ஜூன் 02

எரிபொருள் பயன்பாட்டைக் கட்டுப்படுத்தும் நோக்கில், தற்போது நடைமுறையிலுள்ள கியூ.ஆர். முறைமையை எதிர்காலத்தில் மேலும் கடுமையான முறையில் அமுல்படுத்த எதிர்பார்ப்பதாக துறைமுகங்கள், சிவில் விமானச் சேவைகள் மற்றும் எரிசக்தி அமைச்சர் அநுர கருணாதிலக தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர், உலக சந்தையில் எரிபொருள் விலை உயர்வால் நாட்டிலிருந்து வெளிநாட்டு நாணய வெளியேற்றம் அதிகரித்துள்ளதாகவும், இதனால் பொருளாதாரத்தில் அழுத்தம் ஏற்படுவதாகவும் குறிப்பிட்டார்.

எனவே எரிபொருள் நுகர்வை கட்டுப்படுத்தி, டொலர் செலவினத்தை குறைக்கும் வகையில் கியூ.ஆர். மற்றும் கோட்டா முறைமைகள் மேலும் கடுமைப் படுத்தப்படவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (அ)

# இலங்கைப் பெண் கொலை சென்னையில் 7 பேர் கைது!

சென்னை, ஜூன் 02

சென்னை கோயம்பேட்டில் காரால் மோதி இலங்கைப் பெண் ஒருவர் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விழுப்புரம் இலங்கை அகதிகள் முகாமில் வசித்த 18 வயதுடைய யான்சி என்ற இளம் பெண், இன்ஸ்டாகிராம் மூலம் ஏற்பட்ட பழக்கத்தின் அடிப்படையில் சென்னை வந்திருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனியார் கேளிக்கை விடுதியில் ஏற்பட்ட முரண்பாட்டுக்குப் பின்னர், மோட்டார் சைக்கிளில் சென்ற யான்சி மீது காரை வேகமாக மோதியதில் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். மேலும், அவருடன் பயணித்த சிறுமி ஒருவர் படுகாயமடைந்து வைத்திசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

### யாழில் நடந்த கோர விபத்து ஒருவர் ஆபத்தான நிலையில்!

யாழ்ப்பாணம், ஜூன். 02

யாழ்ப்பாணத்தில் பொலிஸார் துரத்தி வந்த மோட்டார் சைக்கிள் வீதியில் பயணித்த மோட்டார் சைக்கிள் மீது மோதியதில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

நேற்று முன்தினம் மாலை யாழ்ப்பாணம் பொலிஸார் மோட்டார் சைக்கிளில் சென்ற ஒருவரை துரத்திச் சென்றனர். இதன்போது யாழ்ப்பாணம் மவுண்ட்காமல் சந்தியில், பொலிஸார் துரத்தி வந்த மோட்டார் சைக்கிள் வேறொரு மோட்டார் சைக்கிள் மீது மோதியது.

இதன்போது மற்றைய மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் படுகாயமடைந்துள்ளார்.

பின்னர் துரத்தி வந்த நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

காயமடைந்த நபர் ஆபத்தான நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

விபத்து சம்பவம் தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-05)

# ஹர்ஷவுக்கு அமைச்சர் பதவியா? மறுக்கிறது ஐக்கிய மக்கள் சக்தி

கொழும்பு, ஜூன். 02

நிதி அமைச்சு பதவியை பெறுவதற்காக கலாநிதி ஹர்ஷ டி சில்வா அரசாங்கத்துடன் இணையவுள்ளார் என வெளியாகும் தகவலில் உண்மை இல்லை. அவர் ஐக்கிய மக்கள் சக்தியுடனேயே பயணிப்பார்."

இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதம நிறைவேற்று அதிகாரியான அஜித் பி பெரேரா எம்.பி. தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு ,

நிதி அமைச்சு பதவியை பெறுமாறு ஹர்ஷ டி சில்வாவுக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை. அவ்வாறு வழங்கப்பட்டாலும் அதனை ஏற்கும் நிலைப்பாட்டில் அவர் இல்லை.

ரணில் விக்கிரமசிங்க அழைத்தபோதுகூட மக்கள் ஆணைக்கு புறம்பாக ஹர்டி டி சில்வா செயல்படவில்லை. அவர் ஐக்கிய தேசியக் கட்சியுடனேயே பயணிப்பார்.

அதேவேளை, எரான் விக்கிரமரத்ன கிரிக்கெட் சபையில் பதவியேற்றதை எமது கட்சி அங்கீகரிக்கவில்லை. கட்சியில் வகித்த பதவிகளை அவர் துறந்திருந்தாலும், கட்சி உறுப்புரிமையில் இருந்து விலகவில்லை- என்றார். (அ)

# நாட்டில் எபோலா தடுப்பு நடவடிக்கைகள் தீவிரம்!

கொழும்பு, ஜூன். 02

எபோலா வைரஸ் பரவல் அபாயத்தை எதிர்கொள்வதற்காக இலங்கையில் ஆரம்பகட்ட அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொது சுகாதார விசேட நிபுணர் வைத்தியர் துஷானி தாபரேரா தெரிவித்துள்ளார்.

உலக சுகாதார அமைப்பின் வழிகாட்டல்களுக்கு இணங்க சுகாதார அமைச்சு ஆயத்தத் திட்டங்களையும் ஒத்திகைகளையும் முன்னெடுத்து வருவதாக அவர் குறிப்பிட்டார்.

எபோலா பரவல் பதிவான ஆபிரிக்க நாடுகளிலிருந்து வரும் பயணிகள் குறித்து விசேட கண்காணிப்பு நடைமுறைப்ப டுத்தப்பட்டுள்ளதாகவும், சந்தேக நோயாளர்கள் கண்டறியப்பட்டால் உடனடியாக தொற்றுநோயியல் பிரிவுக்கு அறிவிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன், சந்தேக நோயாளர்களுக்கு சிகிச்சை வழங்குவதற்காக ஐ.டி.எச். வைத்தியசாலை தயார் நிலையில் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# மூளைக்காய்ச்சல் தொற்று 237 நபர்கள் அடையாளம்!

கொழும்பு, ஜூன். 02

இலங்கையின் பல்வேறு பகுதிகளில் இருந்து மூளைக் காய்ச்சல் தொற்று சந்தேகத்தில் மொத்தம் 237 நபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல்பிரிவு தெரிவித்துள்ளது.

இதனால், சுகாதார அதிகாரிகள் பொதுமக்களுக்குத் தடுப்பு வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ளனர்.

இதற்கிடையில், நோய் பரவுவதைக் கட்டுப்படுத்த உதவும் வகையில், சுத்தமான குடிதண்ணீரை, குறிப்பாக கொதித்து ஆறிய நீரை அருந்துமாறும் சுகாதார அதிகாரிகள் பொதுமக்களுக்கு அறிவுறுத்தியுள்ளனர்.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட சமூக சுகாதார நிபுணர் வைத்தியர் துஷானி தபரேரா, இதுவரை அடையாளம் காணப்பட்டவர்களிடையே வைரஸ் மூளைக்காய்ச்சல் தொற்றுகள் பரவியிருக்கலாம் என்று நம்புவதாக குறிப்பிட்டார்.

முதல் நோய்த்தொற்றுகள் ஏப்ரல் 15 அன்று மாத்தறை, தெனியாயாவில் கண்டறியப்பட்டன.

அதனைத் தொடர்ந்து, ரிக்கிலகஸ்க, கண்டி, பதுளை, வெலிமடை மற்றும் தியத்தலாவை ஆகிய இடங்களிலிருந்தும் கூடுதல் நோய்த்தொற்றுகள் பதிவாகியுள்ளதாவும் குறிப்பிட்டார்.

பதிவு செய்யப்பட்ட தொற்றுகளில் பெரும்பாலானவை பாடசாலை மாணவர்களிடையே காணப்படுவதாக சுகாதார அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

நேற்று முன் தினம் நிலவரப்படி, 59 நோயாளிகள் மட்டுமே வைததியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர், மீதமுள்ளவர்கள் தொற்றுக்குள்ளாகி குணமடைந்து வீடு திரும்பினர்.

இந்த நோயுடன் தொடர்புடைய முதன்மை அறிகுறிகளில் காய்ச்சல், தலைவலி மற்றும் வாந்தி ஆகியவை அடங்கும்.

சுகாதார மற்றும் கல்வி அமைச்சுகளும் சிறப்பு வழிகாட்டுதல்களை வெளியிட் டுள்ளன. (அ)

# யா. பொது நூலகம் எரிப்பின் 45ஆம் ஆண்டு நினைவேந்தல்


யாழ்ப்பாணம், ஜூன். 02

யாழ்ப்பாணம் பொது நூலகம் தீயூட்டி எரிக்கப்பட்டு 45 ஆண்டுகள் நிறைவடைவதை முன்னிட்டு நேற்று யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது யாழ்ப்பாணப் பொது நூலக ஸ்தாபகர் கே. எம். செல்லப்பா மற்றும் யாழ்ப்பாணப் பொது நூலகம் தீயூட்டி எரிக்கப்பட்ட அதிர்ச்சியிலும் வேதனையிலும் உயிரிழந்த அருட்கலாநிதி தாவீது அடிகள் ஆகியோரின் உருவப்படத்துக்கு மலர் தூவி சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

தொடர்ந்து 45 ஆண்டுகள் நிறைவடைவதை குறிப்பிடும் வகையில் 45 விளக்குகள் ஏற்றப்பட்டன.

மாநகர சபையின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில், யாழ்ப்பாண மாநகர சபையின் ஆணையாளர் டி. சி. அரவிந்தராஜ், யாழ்ப்பாண மாநகர சபையின் பிரதி முதல்வர் இ. தயாளன், பொது நூலகப் பிரதம நூலகர் அனுசியா



சிவகரன், யாழ்ப்பாண மாநகர சபை உறுப்பினர் ஜெ. மயூரன், நூலக உத்தியோகஸ்தர்கள் மற்றும் வாசகர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu
02.06.2026 செவ்வாய்க்கிழமை
பராபவ வருடம், வைகாசி 19

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

## யாழ். பொதுநூலக எரிப்பின் 45 ஆவது வருட. நினைவு

யாழ்ப்பாண பொதுநூலகம் பொலிசாராலும் தென்னிலங்கையில் இருந்து கூட்டிவரப்பட்ட காடையர்களினாலும் எரிந்து நாசமாக்கப்பட்டு நாசமாக்கப்பட்டு நேற்றைய தினத்துடன் (ஜுன் 1) 45 வருடங்கள் கடந்துவிட்டன. நவீன வரலாற்றில் கலாசாரப் பேரழிவுக்கு மிகவும் மோசமான உதாரணங்களில் ஒன்றாக அந்த சம்பவம் என்றும் நிலைத்திருக்கும்.

இந்த நினைவுநாளைப் பற்றி பேசுவது என்பது காலம் இன்னும் முழுமையாகக் குணப்படுத்தாத பெரும் வடுக்களை ஒப்புக் கொள்வதாகும். இது வெறுமனே ஒரு கட்டிடத்தின் அழிவு மாத்திரமல்ல, ஒரு சமூகத்தின் அறிவு இதயம், வரலாற்று நினைவு மற்றும் கலாசார அடையாளத்தின் மீதான பேரினவாதத்தின் தாக்குதலாகும்.

1981 ஜுன் 1 பொதுநூலகம் எரிக்கப்பட்டபோது 95 ஆயிரத்துக்கும் அதிகமான அதிகமான ஈடுசெய்ய முடியாத நூல்களும் ஆவணங்களும் ஓலைச் சுவடிகளும் தீச்சுவாலைக்கு இரையாகின. ஒரு நூலகத்தின் இழப்பு என்பது ஒட்டுமொத்த மனிதகுலத்துக்குமான இழப்பாகும். ஏனெனில் கடந்த காலத்தின் குரல்களை மௌனிக்கச் செய்து, எதிர்காலச் சந்ததிக்கு உரிமையுடைய பாரம்மரியத்தை பறித்து விடுகிறது. என்றாலும், இந்த நாளை நினைவு கூருவது என்பது ஒரு சமூகத்தின் மீண்டெழும் திறனுக்கான சான்றாகவும் விளங்குகிறது.

கட்டிடங்களை மீளக் கட்டியெழுப்பிவிட முடியும். சமூகம் தனது வரலாறு, கதைகள், இலக்கியம் மற்றும் கல்வி மீதான அர்ப்பணிப்பைத் தொடர்ந்து உறுதியுடன் பற்றிப் பிடித்துக் கொள்கிறது. காகிதங்களை எரிக்க முடியும். ஆனால், வரலாற்று விழிப்புணர்வையும் அறிவுத் தேடலையும் ஒருபோதும் அழித்துவிட முடியாது என்பதை இது நிரூபித்து நிற்கிறது. பொதுநூலகம் அழிக்கப்பட்ட சம்பவம் அரசிற்கும் தமிழ்ச் சமூகத்துக்கும் இடையிலான நம்பிக்கையை ஆழமாகச் சிதைத்த ஒரு கலாசாரப் பேரழிவாகும்.

சிறுபான்மையினரின் கலாசார, மொழி மற்றும் அறிவுசார் உரிமைகள் எதிர்காலத்தில் பேரினவாதத்தின் மீறல்களில் இருந்து சட்டரீதியாகவும் கட்டமைப்பு ரீதியாகவும் பாதுகாக்கப்படுவதை உறுதிசெய்வதற்கான அர்ப்பணிப்பு முன்னைய அரசாங்கங்களினால் போதுமானளவுக்கு உறுதிசெய்யப்படாத நிலையில், ஜனாதிபதி அநுர குமார திசநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் அர்த்தமுள்ள நல்லிணக்க முயற்சிகளை முன்னெடுப்பதில் அக்கறை காட்டாத பட்சத்தில் வரலாற்றுச் சோகங்களை சிறுபானமைச் சமூகங்கள் நினைவு கூர்ந்து கொண்டேயிருக்கும்.

ஒரு அரசாங்கம் வரலாற்று அநீதிகளை எவ்வாறு எதிர் கொள்கிறது என்பதன் மூலமே நல்லிணக்கம் மீதான பற்றுறுதி அளவிடப்படுகிறது. இலங்கைச் சமூகம் நல்லிணக்கத்தை நோக்கி முன்னோக்கி நகருவதற்கு யாழ்ப்பாணம் பொது நூலக எரிப்பு மாத்திரமல்ல, தமிழ்ச் சமூகத்தின் எதிர்காலத்தை கேள்விக்குள்ளாக்கிய கடந்த கால இனவாத அட்டூழியங்களும் ஒரு பாடமாக பாதிக்கப்பட்ட சமூகங்களினால் மாத்திரமல்ல, பெரும்பான்மைச் சமூகத்தினாலும் ஒரு பாடமாக நினைவு கூரப்பட வேண்டியது அவசியமாகும்.

# ஐக்கிய அரபு இராச்சியம் ஏன் ஒபெக் மற்றும் ஒபெக் + அமைப்புகளிலிருந்து வெளியேறியது?

எம். கல்யாணராமன்

## இதுவரை நடந்தது;




மே முதலாம் திகதி ஐக்கிய அரபு இராச்சியம் பெட்ரோலிய ஏற்றுமதி நாடுகளின் கூட்டமைப்பான ஒபெக் மற்றும் ஒபெக் + அமைப்புகளிலிருந்து அதிகாரப்பூர்வமாக வெளியேறியது. 1960 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட ஒபெக், உறுப்பு நாடுகளின் பெட்ரோலியக் கொள்கைகளை ஒருங்கிணைக்கவும் உலகளாவிய எண்ணெய் சந்தையை ஒழுஙனகமைத்து நிலைப்படுத்தவும் உருவாக்கப்பட்ட அரசுகளுக்கிடையேயான ஒரு நிரந்தர அமைப்பாகும்.

2016 ஆம் ஆண்டில் உருவாக்கப் பட்ட ஒபெக் + என்பது, அடிப்படை ஒபெக் நாடுகளுடன் ரஷ்யா உள்ளிட்ட மேலும் 10 முக்கிய எண்ணெய் உற்பத்தி நாடுகளை உள்ளடக்கிய ஒரு விரிவான கூட்டணியாகும்.

ஈரான் போர் காரணமாக ஒரு வரலாற்று ரீதியான எரிசக்தி அதிர்ச்சியும் உலகப் பொருளாதாரத்தில் நிலையற்ற தன்மையும் ஏற்பட்டுள்ள சூழலில், ஐக்கிய அரபு இராச்சியத்தின் இந்த முடிவு எண்ணெய் ஏற்றுமதி குழுக்களுக்கும், அதன் தலைமையாகக் கருதப்படும் சவுதி அரேபியாவிற்கும் பலத்த அடியைக் கொடுத்துள்ளது.

### ஐக்கிய அரபு இராச்சியத்தின் வெளியேறியதற்கான காரணங்கள் என்ன?

இராச்சியத்துக்கும் ஒபெக் அமைப்பிற்கும், குறிப்பாக சவுதி அரேபியாவிற்கும் இடையிலான கருத்து வேறுபாடுகள் நீண்ட காலமாகவே புகைந்து கொண்டிருந்தன. 1970 களில் ஐக்கிய இராச்சியத்திடமிருந்து (U.K.) சுதந்திரம் பெற்ற ஐக்கிய அரபு இராச்சியத்தை அங்கீகரிக்க சவுதி அரேபியா ஆரம்பத்தில் தயங்கியது. தான் உரிமை கோரிய சர்ச்சைக்குரிய சில பகுதிகளை ஐக்கிய அரபு இராச்சியம் விட்டுக் கொடுத்த பின்னர்தான் சவுதி அதனை அங்கீகரித்தது.

இரு நாடுகளின் அரசியல் கட்டமைப்பும் சமூகமும் வெவ்வேறானவை. சவுதி அரேபியா ஒரு மன்னராட்சி நாடாக இருந்தாலும், அதன் பெரிய அரச குடும்பத்திற்குள் ஒருமித்த கருத்தை உருவாக்கி மெதுவாகவே செயல்படுகிறது. ஆனால், ஐக்கிய அரபு இராச்சியம் வரலாற்று ரீதியாகவே சுறுசுறுப்பாகவும் விரைவாகவும் செயல்படும் தன்மையைக் கொண்டுள்ளது.

இருப்பினும், ஈரான் ஒரு பொதுவான எதிரியாகக் கருதப்பட்டதால், எரிசக்தி உற்பத்தியில் இராச்சியம் இதுவரை சவுதி அரேபியாவுடன் இணைந்து செயல்பட்டு வந்தது.

உலகளாவிய எண்ணெய் விலையைக் கட்டுப்படுத்த ஒபெக் நாடுகள் உற்பத்தி ஒதுக்கீடுகளை (Quotas) செய்கின்றன. இதில் சவுதி அரேபியா முக்கியப் பங்கு வகிக்கிறது. தற்போது சவுதிக்கு நாளொன்றுக்கு 10 மில்லியன் பீப்பாய்கள் உற்பத்தி ஒதுக்கீடு உள்ளது, ஆனால் அதற்குக் கூடுதல் 2 மில்லியன் பீப்பாய்களை உற்பத்தி செய்யும் திறன் உள்ளது. விலையில் மாற்றம் ஏற்படும்போது சவுதியால் உற்பத்தியை விரைவாக அதிகரிக்கவோ குறைக்கவோ முடியும்

ஐக்கிய அரபு இராச்சியத்துக்கு சுமார் 3.5 மில்லியன் பீப்பாய்கள் ஒதுக்கீடு உள்ளது, ஆனால் அதன் உற்பத்தித் திறன் 4.85 மில்லியனாக உள்ளது. 2027 ஆம் ஆண்டுக்குள் இது 5 மில்லியனாக உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

உற்பத்தியைக் குறைப்பதன் மூலம் விலையைத் தக்கவைத்து, நீண்ட காலத்திற்குப் புதைபடிவ எரிபொருள் (Fossil fuel) பயன்பாட்டைத் தொடர சவுதி விரும்புகிறது. உதாரணமாக, கப்பல் போக்குவரத்தில் மசகு எண்ணெய் பயன்பாட்டைத் தக்கவைக்க அது முயற்சிக்கிறது.

எரிசக்தி மாற்றம் (Energy transition) தவிர்க்க முடியாதது என்பதையும், புதுப்பிக்கத்தக்க மற்றும் பசுமை எரிபொருட்களின் அவசியத்தையும் ஐக்கிய அரபு இராச்சியம் உணர்ந்துள்ளது. எனவே, விரைவாக எண்ணெய் மூலம் இலாபம் ஈட்டி, அந்தப் பணத்தை நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தப் பயன்படுத்த இராச்சியம் விரும்புகிறது.

### வெளியுறவுக் கொள்கை மோதல்கள் வெளியுறவுக் கொள்கையிலும் இராச்சியமும் சவுதியும் முரண்படுகின்றன:

யேமனில் ஈரானின் ஆதரவு பெற்ற ஹௌதிகளுக்கு எதிராக இரு நாடுகளும் இணைந்து செயற்பட்டாலும், அண்மைக்காலமாக தாங்கள் ஆதரிக்கும் குழுக்கள் மூலம் ஒரு நிழல் யுத்தத்தில் (Proxy battle) ஈடுபட்டுள்ளன.

சவுதி அரேபியா யேமனில் உள்ள சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட அரசாங்கத்தையும் "அல்-இஸ்லா" (Al-Islah) அமைப்பையும் ஆதரிக்கிறது. ஆனால் ஐக்கிய அரபு இராச்சியம் பிரிவினைவாத சக்தியான "தெற்கு இடைக்கால கவுன்சிலை" (Southern Transitional Council) ஆதரிக்கிறது.

சூடானில் இரு நாடுகளும் எதிர் எதிர் அணிகளை ஆதரிக்கின்றன.

பாரசீக வளைகுடா நாடுகளுக்கு மாற்றாக எண்ணெய் மற்றும் எரிவாயு உற்பத்தியில் வளர்ந்து வரும் லிபியாவில் தனது செல்வாக்கை செலுத்த ஐக்கிய அரபு இராச்சியம் தீவிரமாக முயன்று வருகிறது.

2021 ஆம் ஆண்டில், ஒபெக் அமைப்பின் முடிவுகளுக்கு ஐக்கிய அரபு. இராச்சியம் கடும் எதிர்ப்பு தெரிவித்ததன் மூலம் இக்கருத்து வேறுபாடுகள் உச்சக்கட்டத்தை எட்டின. இருப்பினும், ஒருமித்த கருத்து எட்டப்பட்டு, இராச்சியம் அந்த அமைப்பிலேயே நீடிப்பதை உறுதி செய்ய அதற்கு எண்ணெய் உற்பத்தியில் கூடுதல் பங்கு வழங்கப்பட்டது.

ஈரான் மீதான போருக்குப் பிறகு, சமீபகாலமாக தனது பொருளாதாரம், அரசியல் மற்றும் வெளியுறவுக் கொள்கை இலக்குகளில் அதிக உறுதியுடன் செயல்பட்டு வரும் ஐக்கிய அரபு இராச்சியம். ஒபெக் அமைப்பிலிருந்து விலகும் தனது முடிவை அறிவித்துள்ளது. இந்த நெருக்கடியின் தீவிரம் குறையும் என்று இராச்சியம் எதிர்பார்க்கிறதா என்பது தெளிவாகத் தெரியவில்லை என்றாலும், ஹார்முஸ் நீரிணை வழியாக எண்ணெய் போக்குவரத்து முடங்கியுள்ளதால், அதன் ஒபெக் விலகல் அறிவிப்பு எண்ணெய் விலையில் பெரிய அளவில் தாக்கத்தை ஏற்படுத்தவில்லை.

### ஐக்கிய அரபு இராச்சியத்தின் அடுத்தகட்ட நடவடிக்கை என்ன?

ஐக்கிய அரபு இராச்சியம் நாடுகளுடனான தனது உறவுகளை மறுபரிசீலனை செய்து, தனது முன்னுரிமைகளுக்கு ஏற்ப அவற்றை மாற்றியமைக்கும். ஈரான் நடத்திய தாக்குதல்களால் இராச்சியம் கடுமையாக பாதிக்கப்பட்டபோது (இது இஸ்ரேல் எதிர்கொண்டதை விட அதிகம்), சில அரபு நாடுகள் தங்களுக்கு போதிய ஆதரவு அளிக்கவில்லை என்று இராச்சிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நிலைமை சீராகும்போது, அது கட்டம் கட்டமாக நடந்தாலும், எண்ணெய்க்கான தேவை உடனடியாக அதிகரிக்கும் ஐக்கிய அரபு இராச்சியம் அதனைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள முடியும். இந்த ஆண்டில் தனது எண்ணெய் உற்பத்தியை படிப்படியாக 10 இலட்சம் பீப்பாய்களாக அதிகரிக்க அந்த நாடு திட்டமிட்டுள்ளது.

(மிகுதி நாளை தொடரும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஜூன் - 02 செவ்வாய்க்கிழமை
பராபவ வருடம் - வைகாசி 19
நல்ல நேரம் : 7.31 - 09.00
ராகு காலம் : 3.00 - 04.00
திதி : துவிதியை




**மேடம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் புதிய முயற்சிகள் தள்ளிப் போய் முடியும். குடும்பத்தில் சிறு வார்த்தைகள் கூட பெரிய தகராறில் போய் முடியும். கவனம் தேவைப்படும் நாள்.

**இடபம்**
சவாலாக தெரிந்த சில வேலைகள் சாதாரணமாக முடியும். பிள்ளைகளால் அந்தஸ்து உயரும். கல்யாணப் பேச்சு வார்த்தை சாதகமாக முடியும். மனைவி வழியில் நல்ல செய்தி உண்டு.

**மிதுனம்**
குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள். வழக்கில் நல்ல தீர்ப்பு வரும். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் உதவுவார்கள். தொட்டது துலங்கும் நாள்.

**கடகம்**
பிள்ளைகளின் வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். ஆடம்பரச் செலவுகளை குறைத்து சேமிக்கத் தொடங்குவீர்கள். புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். நட்பு வட்டம் விரிவடையும்.

**சிம்மம்**
அரசு அதிகாரிகளின் உதவியால் சில காரியங்களை முடிப்பீர்கள். மகளுக்கு நல்ல வரன் அமையும். எதிர்பார்த்த வேலைகள் தடையின்றி முடியும். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**கன்னி**
உடன்பிறந்தவர்கள் உங்கள் வேலைகளைப் பகிர்ந்துக் கொள்வார்கள். துணிச்சலாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். விசேஷங்களை முன்னின்று நடத்துவீர்கள்.

**துலாம்**
இதுவரை இருந்த காரியத்தடைகள் நீங்கி குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். வராது என்றிருந்த பணம் கைக்கு வரும். சுப நிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். உறவினர்கள் மதிப்பார்கள்.

**விருட்சிகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் பல வேலைகளையும் நீங்களே பார்க்க வேண்டி வரும். நண்பர்கள் உறவினர்களால் செலவினங்கள் அதிகரிக்கும். புதியவர்களை நம்பி ஏமாற வேண்டாம்.


**தனுசு**
சின்ன சின்ன வேலைகளையும் அலைந்து திரிந்து முடிக்க வேண்டி வரும். பிள்ளைகளால் டென்ஷன் அதிகரிக்கும். வாகனத்தில் அதிக கவனம் தேவை. பொறுமைத் தேவைப்படும் நாள்.

**மகரம்**
வெளிவட்டாரத்தில் அந்தஸ்து உயரும். பழைய கடன் பிரச்னை கட்டுப்பாட்டிற்குள் வரும். குடும்பத்தினருடன் சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். வேற்றுமதத்தவர் உதவுவார்.

**கும்பம்**
பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். உடன்பிறந்தவர்கள் ஒத்தாசையாக இருப்பார்கள். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். உங்களால் பயனடைந்தவர்கள் இப்போது உங்களுக்கு உதவி செய்வார்கள்.

**மீனம்**
கணவன்-மனைவிக்குள் இருந்த மோதல்கள் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். பணவரவு திருப்தி தரும். புதியவர்கள் நண்பர்களாவார்கள். வெளிவட்டாரத்தில் புதுஅனுபவம் உண்டாகும்.

# காணாமல்போன மீனவர்களின் குடும்பங்களுடன் டக்ளஸ் சந்திப்பு




யாழ்ப்பாணம், ஜூன். 02

பருத்தித்துறைக் கடலில் மீன்பிடிக்கச் சென்று காணாமல் போன மீனவர்களின் உறவினர்களை முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று முன்தினம் நேரில் சந்தித்துள்ளார்.

தொழிலுக்குச் சென்ற மீனவர்களை தேடும் முயற்சிகளில் பலர் ஈடுபட்டிருக்கின்ற போதிலும் இதுவரை திருப்திகரமான பதில் எதுவும் கிடைக்கவில்லை என தெரிவித்துள்ள டக்ளஸ் தேவானந்தா, கடலுக்கு போனவர்கள் உரிய நேரத்துக்கு கரை திரும்பவில்லை என்றதும், கடற்படையினரை அனுப்பி தேடுவதற்கு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருக்கவேண்டும் என தெரிவித்தார். (அ)

# வவுனியா மாவட்ட செயலகத்தில் வெசாக்!



வவுனியா, ஜூன். 02

வெசாக் தினத்தை முன்னிட்டு வவுனியா மாவட்ட செயலகத்தில் தன்சல் நிகழ்வு சிறப்பாக இடம்பெற்றது.

வவுனியா மாவட்ட செயலக நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் இந்நிகழ்வு மாவட்ட அரச அதிபர் பீ.ஏ.சரத்சந்திர தலைமையில் இடம்பெற்றது.

இதில் மேலதிக அரசாங்க அதிபர் நா.கமலதாசன், மாவட்ட செயலக அதிகாரிகள், உத்தியோகததர்கள், மதகுருமார் எனப் பலரும் கலந்து கொண்டதுடன், ஏ-9 வீதியால் பயணித்த பலரும் தன்சலை பெற்றுச் சென்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# உரும்பிராய் கிராமத்தின் வரலாற்று நூல் “செம்பாட்டுச் சீமை” வெளியீட்டு விழா!



யாழ்ப்பாணம், ஜூன். 02

உரும்பிராயை சேர்ந்தவரும் லண்டனில் வாழ்பவருமாகிய பொறியியலாளர் எம் ரி. செல்வராஜா எழுதிய செம்பாட்டுச் சீமை என்ற உரும்பிராய் கிராமத்தின் சரித நூலின் வெளியீட்டு விழா நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு உரும்பிராய் இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது

. கோப்பாய் ஆசிரியர் கலாசாலை முதல்வர் செந்தமிழ்ச் சொல்லருவி சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறை தலைவர் சாந்தினி அருளானந்தம் தொடக்க உரை ஆற்றி நூலை வெளியிட்டு வைத்தார் .

நூலின் வெளியிட்டுரையை பிரதி கல்வி பணிப்பாளர் பஞ்சாட்சரம் கணேசனும் ஆய் வுரையை பேராதனை பல்கலைக் கழக முன்னாள் தமிழ்த்துறை தலைவர் பேராசிரியர் துரை மனோகரனும் ஆற்றினர்.

நிகழ்வில் ஆசியுரைகளை செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன், சுன்னாகம் பங்குத்தந்தை அருட்பணி மைக்கல்முத்து நிக்சன் கொலின் அடிகளார் ஆகியோர் ஆற்றினர்.

உரும்பிராய் இந்துக் கல்லூரி ஆசிரியர் ம. வினோகாந்த் வரவேற்புரையாற்றினார். முன்னாள் கோட்டக் கல்விப் பணிப்பாளர் அ.ஈஸ்வரநாதன், ஞானவெளிச்சம் வொட்கின்சன், அருட்பணி இம்மானுவேல் டேவிட், இணுவில் ந. சச்சிதானந்தம் ஆகியோர் வாழ்த்துரைகளை வழங்கினர்.

# பிக்கு ஒருவரால் சிறுமி பாலியல் பலாத்காரம் எதிர்ப்பு தெரிவித்து வவுனியாவில் போராட்டம்!

வவுனியா, ஜூன். 02

பௌத்த மதகுரு ஒருவரால் சிறுமி பாலியல் பலாத்காரத்துக்கு உட்படுத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டு அவருக்கு பின்னர் பிணை வழங்கப்பட்டமை தொடர்பில் கண்டனம் தெரிவித்து பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான வன்முறையை எதிர்ப்போம் என்ற கருப்பொருளில் வவுனியாவில் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா மக்கள் அமைப்பினால் முன்னெடுக்கப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தில் பௌத்த பிக்குவுக்கு எதிரான கோஷங்கள் எழுப்பப்பட்டன.

இந்த ஆர்ப்பாட்டத்தில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன்,

முன் னாள் மாகாண சபை உறுப்பி னர் செந்தில்நாதன் மயூரன் மற் றும் இளைஞர்கள் கலந்து கொண்டனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தன்சல் வரிசையில் நின்றோரை திடீரென மோதி தள்ளியது கார்!

## கொழும்பு மீகொடையில் 6 பேர் உயிரிழப்பு

கொழும்பு, ஜுன். 02

கொழும்பு மாவட்டம் மீகொடை பகுதியில் தன்சல் ஒன்றுக்காக வரிசையில் நின்றிருந்தவர்கள் மீது வாகனம் ஒன்று மோதி ஏற்பட்ட விபத்தில் 6 பேர் உயிரிழந்துள்ளனர்.

விபத்தில்காயமடைந்த மேலும் 13 பேர் சிகிச்சைக்காக ஹோமாகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்தில் குழந்தை ஒன்றும் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அவிசாவளையிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த கப் ரக வாகனம் ஒன்றே, மீகொட பகுதியில் வழங்கப்பட்ட தன்சலுக்காக வரிசையில் நின்றிருந்தவர்கள் மீது மோதியது.

சம்பவத்தில் மூன்று ஆண்களும், மூன்று பெண்களும் உயிரிழந்துள்ளதாக வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவித் துள்ளன.

கப் ரக வாகனத்தின் சாரதி தப்பிச் செல்ல முற்பட்ட வேளை மீகொடை சந்தியில் வைத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டதுடன், குறித்த கப்ரக வாகனமும் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட் டுள்ளது.

விபத்து இடம்பெற்ற சந்தர்ப்பத்தில் கப் ரக வாகனத்தைச் செலுத்திய சாரதி மது போதையில் இருந்தமை தெரிய வந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் மீகொடை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# அவுஸ்திரேலியாவில் அமைச்சர் விஜித இலங்கைச் சமூகத்தினருடன் சந்திப்பு

கொழும்பு, ஜுன். 02

அவுஸ்திரேலியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் விஜித ஹேரத், மெல்பேர்ன் நகரில் வாழும் இலங்கை சமூகத்தினரைச் சந்தித்து விசேட கலந்துரையாடலொன்றில் ஈடுபட்டார்.

இச்சந்திப்பின் போது, ஆஸ்திரேலியாவில் வாழும் இலங்கை மக்கள் தாங்கள் எதிர்நோக்கும் சவால்கள் மற்றும் பிரச்னைகள் குறித்து அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு சென்றனர்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர், புலம்பெயர்ந்து வாழும் இலங்கை மக்களின் பிரச்னைகளைத் தீர்ப்பதற்காக தற்போதைய அரசாங்கம் எடுத்துள்ள முற்போக்கான முடிவுகள் மற்றும் எதிர்காலத் திட்டங்கள் குறித்து விரிவாக விளக்கமளித்தார்.

இதனைத் தொடர்ந்து, மெல்பேர்னில் நடைபெற்ற மதிய உணவு விருந்தொன்றில் கலந்துகொண்ட அமைச்சர் விஜித ஹேரத், விக்டோரியா மாநிலத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அஸ்திரேலிய பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரைச் சந்தித்து இருதரப்பு விவகாரங்கள் குறித்துக் கலந்துரையாடினார். (அ)

# வெலிக்கடை கொள்ளைச் சம்பவம் போதைப்பொருளுடன் இருவர் கைது

கொழும்பு, ஜுன் 02

வெலிக்கடை பொலிஸ் பிரிவில் வாடகை கார் ஓட்டுநரிடம் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவம்தொடர்பில்பொரெல்லை கோதமி வீதியைச் சேர்ந்த 24 வயதுடைய இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விசாரணைகளில், வாடகை வாகன ஓட்டுநர்களை இலக்காகக் கொண்ட பல கொள்ளைச் சம்பவங்களுடன் இவர்களுக்கு தொடர்பு இருப்பது தெரிய வந்துள்ளது.

கைது செய்யப்பட்டபோது சந்தேகநபர்களிடமிருந்து கணிசமான அளவு ஐஸ் போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளது.

மேலும், மே மாதத்தில் பல்வேறு பகுதிகளில் நடத்தப்பட்ட கொள்ளைச் சம்பவங்களிலும் இவர்கள் ஈடுபட்டிருந்ததாக முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (அ)

# மேலும் ஐந்து காடுகள் பாதுகாப்பு பட்டியலில்

கொழும்பு, ஜுன். 02

2025ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட 'வனஸ்பதி' திட்டத்தின் கீழ் இதுவரை 81 காடுகள் பாதுகாக்கப்பட்ட வனப்பகுதிகளாக வர்த்தமானி மூலம் பிரகடனப்படுத்தப் பட்டுள்ளன.

எதிர்வரும் ஜுன் 5ஆம் திகதி மேலும் 5 காடுகள் பாதுகாக்கப்பட்ட வனங்களாக அறிவிக்கப்படவுள்ளதால், மொத்த எண்ணிக்கை 86 ஆக அதிகரிக்கவுள்ளதாக சுற்றாடல்துறை அமைச்சர் தம்மிக்க பட்டபெந்தி தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றும்போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

இதில் ரிதிகல, அலியா வெடுணுவெள, புலாகல, கோன்கெட்டியாவ மற்றும் கல்லஞ்சிய காடுகள் எதிர்வரும் 5ஆம் திகதி பாதுகாக்கப்பட்ட வனங்களாக பிரகடனப்படுத் தப்படவுள்ள தாகவும் அவர் மேலும் கூறினார். (அ)

# தோல்வி பயத்தால் தேர்தலை பிற்போடப் பார்க்கிறது அரசு!

## ரோஹித அபேகுணவர்தன குற்றச்சாட்டு

கொழும்பு, ஜுன். 02

அரசு மாகாண சபைத் தேர்தலை நடத்தினால் படுதோல்வியடைவது உறுதி என்பதால், எல்லை நிர்ணய விவகாரத்தைக் காரணம் காட்டித் தேர்தலைத் தொடர்ச்சியாகப் பிற்போடும் என்று எதிரணி பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்தார்.

களுத்துறையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-நாட்டு மக்கள் தற்போது ஒவ்வொரு மாத இறுதி நாள்களையும் அச்சத்துடன் தான் எதிர்கொள்கின்றார்கள். மத்திய கிழக்கில் நிலவும் மோதல்களைக் காரணம்காட்டி, ஒவ்வொரு மாதமும் எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டு வருகின்றது.

அரிசியின் விலையை அதிகரிப்பதற்கு அரசு தேவையில்லை என்றும், புறக்கோட்டை மொத்த விற்பனை வியாபாரிகளாலேயே விலையை அதிகரிக்க முடியும் என்றும், தமக்கு அரசு தேவையில்லை என்றும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க முன்பு குறிப்பிட்டிருந்தார்.

கடந்த கால அரசுகள் வெளியகக் காரணிகளால் நெருக்கடிக்குள்ளான போது, ஜே.வி.பியினர் அவ்வாறு செய்யலாம், இவ்வாறு செய்யலாம் என்று பாடம் கற்பித்தார்கள்.

ஆனால், இன்று அவர்கள் சர்வதேச நாணய நிதியம் கற்பிக்கும் பாடத்துக்கு அமைவாகவே செயற்பட்டு வருகின்றார்கள். சர்வதேச நாணய நிதியத்தின் கடனைப் பெற்றுக் கொள்வதற்காக ஒட்டுமொத்த மக்களும் கடனாளியாக் கப்படுகின்றார்கள்.

நாணய நிதியத்தின் கட்டளைக்கு அமைவாகவே ஒவ்வொரு மாதமும் எரிபொருள் விலை அதிகரிக்கப்படுகின்றது. இதனால் அரசின் மீது நாட்டு மக்கள் கடும் அதிருப்தியடைந்துள்ளார்கள்.

அரசின் மீதான மக்களின் இந்த அதிருப்தியை வெளிப்படுத்துவதற்கு வாய்ப்பளிக்கப்பட வேண்டும். அதற்கு உடனடியாகத் தேர்தலை நடத்த வேண்டும்.

மாகாண சபைத் தேர்தலை இந்த ஆண்டு நடத்த முடியாது என்று மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா குறிப்பிடுகின்றார். ஆனால், அவரது கருத்துக்கு முரணாக, மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படும் என்றும், தேர்தலுக்கு நிதி நெருக்கடி ஏதுமில்லை என்றும் அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ குறிப்பிடுகின்றார்.

எனவே, மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் இவர்களில் யார் குறிப்பிடுவது உண்மை என்பதை அரசு நாட்டு மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும். எங்களைப் பொறுத்தவரை ரில்வின் சில்வா குறிப்பிடுவதுதான் உண்மை.

இந்த அரசு மாகாண சபைத் தேர்தலை நடத்தாது. அவ்வாறு நடத்தினால் படுதோல்வியடைவது உறுதி என்பதால், எல்லை நிர்ணய விவகாரத்தைக் குறிப்பிட்டுக் கொண்டு அரசு மாகாண சபைத் தேர்தலைத் தொடர்ச்சியாகப் பிற்போடும்.-என்றார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ஆழமான கட்டமைப்பு சீர்திருத்தம் கல்வித்துறையில் கட்டாயம் தேவை !

## பிரதமர் ஹரிணி வலியுறுத்தல்

கொழும்பு, ஜூன். 02
சமத்துவமின்மையையும் செயற்கை நுண்ணறிவு சவால்களையும் வெற்றிகொள்வதற்கு பாடத்திட்டத் திருத்தங்களுக்கு அப்பால் சென்ற ஆழமான கட்டமைப்பு ரீதியிலான கல்விச் சீர்திருத்தங்கள் அவசியம் எனப் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

கொழும்பு பேராயர் துஷாந்த ரொட்ரிகோவின் அழைப்பின் பேரில், நிகழ்த்திய உரையின் போதே பிரதமர் இதனைக் குறிப்பிட்டார்.

21 ஆம் நூற்றாண்டில் இலங்கை மற்றும் அதற்கு அப்பாலான கல்வியின் எதிர்காலத்தை வடிவமைத்தல் என்ற தலைப்பில் ஆற்றிய விரிவுரையின் போது, இலங்கையின் பல்மத ஒற்றுமை மற்றும் சமூகப் பன்முகத்தன்மையின் முக்கியத்துவத்தைப் பிரதமர் வலியுறுத்தினார்.

இலங்கையின் கல்விக் கொள்கையின் வரலாற்றுப் பயணத்தைப் பற்றி கருத்துத் தெரிவித்த பிரதமர், 1971 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட சர்வதேச தொழிலாளர் அமைப்பின் அறிக்கையை மேற்கோள் காட்டி, நாட்டில் நிலவும் "திறன்கள் மற்றும் தொழில் வாய்ப்புகளுக்கு இடையிலான பொருத்தமின்மை மற்றும் அரசத் துறை வேலைவாய்ப்புகளை நோக்கிய வரிசையில் காத்திருக்கும் நிலை ஆகியன பொருளாதார சவால்களுக்கு காரணமாக அமைந்திருப்பதாக சுட்டிக்காட்டினார்.

பல தசாப்தங்களாக ஸ்ரிம் கல்வி மற்றும் தொழில்நுட்பத் திறன்கள் அபிவிருத்திக்கு முன்னுரிமை வழங்கப்பட்டிருந்த போதிலும், அதன் மூலம் நாட்டின் கட்டமைப்பு ரீதியிலான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அச் சீர்திருத்தங்களால் இயலாது போயிருக்கின்றது என அவர் மேலும் தெரிவித்தார்.

அத்தோடு கல்வி கட்டமைப்பில் தீர்க்கப்பட வேண்டிய ஐந்து முக்கிய நெருக்கடிகளைப் பிரதமர் சுட்டிக் காட்டினார்.

கல்வி என்பது உலகைப் புரிந்து அதை மாற்றியமைக்கும் ஒரு செயற்பாடாகும் என்றும், ஆசிரியர் தொழிலை மீண்டும் சமூக மரியாதைக்குரிய ஒரு உயரிய தொழிலாக நிலைநிறுத்த வேண்டுமெனவும், கல்விச் சீர்திருத்தங்களின் இறுதி இலக்கு சமூகத்தின் அனைத்துத் துறைகளிலும் மக்கள் நம்பிக்கை வைக்கக்கூடிய தலைவர்களை உருவாக்குவதாகும் என்றும் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய மேலும் தெரிவித்தார். (அ)

# உணவு ஒவ்வாமையினால் 8 பேர் வைத்தியசாலையில்!

கொழும்பு, ஜூன். 02
நுவரெலியாவில் கிறிஸ்தவ ஆலயம் ஒன்றில் நேற்று முன்தினம் பிற்பகல் வழங்கப்பட்ட உணவை உட்கொண்ட 8 பேர் திடீர் ஒவ்வாமை காரணமாக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

குறித்த 8 பேரும் முட்டை அடங்கிய சோறு பொதியை உட்கொண்டனர். இவர்களுக்கு வாந்தி, வயிற்றுவலி, வயிற்றுப் போக்கு போன்ற அறிகுறிகள் தென்பட்டதை அடுத்து, அவர்கள் நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு தொடர்ந்து சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

அவர்களின் உடல்நிலை சற்று தேறிவருவதாகவும் ஆபத்தான எவ்வித பாதிப்பும் இல்லை எனவும் வைத்திய சாலையில் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (அ)

# பௌர்ணமி தினத்தில் கசிப்பு வியாபார நிலையம் முற்றுகை!

மட்டக்களப்பு, ஜூன். 02
மட்டக்களப்பு, கொக்குவில் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சுவிஸ் கிராமம் மற்றும் திராய்மடு பகுதியில் நீண்டகாலமாகச் சட்டவிரோத கசிப்பு வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த பிரபல வியாபாரி ஒருவரை, 27.5 லீற்றர் கசிப்புடன் மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் கைது செய்துள்ளனர்.

புனித பொசன் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு நாடு முழுவதும் மதுபான விற்பனை தடை செய்யப்பட்டிருந்த நிலையிலேயே, பொலிஸாரின் இந்த அதிரடி சோதனை நடவடிக்கை அரங்கேறியுள்ளது.

மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பிரிவின் விசேட புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவல் ஒன்றின் அடிப்படையில் இந்தச் சோதனை நடத்தப்பட்டுள்ளது.

விசேட புலனாய்வுப் பிரிவினர் மற்றும் தலைமையக பொலிஸார் இணைந்து, திராய் மடு பகுதியில் அமைந்துள்ள குறித்த கசிப்பு வியாபாரியின் வீட்டை சுற்றிவளைத்து முற்றுகையிட்டனர்.

இதன்போது, வீட்டின் உள்ளே கசிப்பு வியாபாரத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த 29 வயதுடைய பிரபல வியாபாரியைப் பொலிஸார் கையும் மெய்யுமாகக் கைது செய்தனர்.

# கிழக்கு நட்புறவு ஒன்றியத்தின் புதிய கட்டடத்துக்கு அடிக்கல்



அம்பாறை, ஜூன். 02
கிழக்கு பிராந்தியத்தில் சமூக சேவைகளை முன்னெடுக்கும் நோக்கில் 1995 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட கிழக்கு நட்புறவு ஒன்றியத்தின் புதிய செயலகக் கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டு விழா நேற்று முன் தினம் சிறப்பாக நடைபெற்றது.

பிரதேசத்தின் முன்னணி கல்விமான்கள், திணைக்களத் தலைவர்கள், ஓய்வு பெற்ற உயர் அதிகாரிகள், அரச அதிகாரிகள் மற்றும் தொழிலதிபர்கள் உள்ளிட்ட சமூகப் பொறுப்புமிக்க ஆளுமைகளை உறுப்பினர்களாகக் கொண்டு இயங்கி வரும் கிழக்கு நட்புறவு ஒன்றியம், கடந்த மூன்று தசாப்தங்களாக பல்வேறு சமூக நலப் பணிகளை முன்னெடுத்து வருகிறது.

இந்நிகழ்வில் உரையாற்றிய கிழக்கு நட்புறவு ஒன்றியத்தின் தவிசாளரும் பொறியியலாளருமான எம்.எம். நஸீர், "இந்த புதிய கட்டடம் வெறும் கட்டடம் அல்ல. இது எமது ஒன்றியத்தின் ஒற்றுமை, நம்பிக்கை, விடாமுயற்சி மற்றும் இலட்சியத்தின் சின்னமாகும். எதிர்காலத்தில் பிரதேசத்தின் சமூக, கலாசார மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கும் மையமாக இது திகழும்" எனத் தெரிவித்தார்.

மேலும், இந்தக் கட்டடத்தை குறுகிய காலத்திற்குள் நிர்மாணித்து முடிப்பதற்காக உறுப்பினர்கள், நலன் விரும்பிகள் மற்றும் பொதுமக்களின் தொடர்ச்சியான ஆதரவும் பங்களிப்பும் அவசியம் என அவர் வலியுறுத்தினார். (அ)

# துப்பாக்கியுடன் விவசாயி கைது!

மட்டக்களப்பு, ஜூன். 02
கரடியனாறு பொலிஸ் பிரிவிலுள்ள வேப்பவெட்டு வான் வயல் பிரதேசத்தில் சட்டவிரோதமாக மறைத்து வைக்கப்பட்டிருந்த உள்நாட்டு தயாரிப்பான ஷொட்கன் ரக துப்பாக்கி ஒன்றுடன் பன்குடா வெளியைச் சேர்ந்த விவசாயி ஒருவரை நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை மாலையில் கைது செய்துள்ளதாக கரடி யனாறு பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவல் ஒன்றினையடுத்து கரடியனாறு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பி.பி.பத்தும் குமார தலைமையிலான பொலிஸ் குழுவினர் வேப்பவெட்டுவான் வயல் பகுதியில் நிலக்கடலை பயிர்ச் செய்கை பகுதியில் சட்டவிரோதமாக மறைத்து வைக்கப்பட்டிருந்த துப்பாக்கி ஒன்றை மீட்டதுடன் பன்குடாவெளி பகுதியைச் சேர்ந்த 27 வயதுடைய விவசாயி ஒருவரை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கரடியனாறு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# 14 வயது சிறுமி துஷ்பிரயோகம் அம்பாறையில் மௌலவி கைது!

அம்பாறை, ஜூன். 02
14 வயது சிறுமி ஒருவரை பாலியல் துன்புறுத்தலுக்கு உட்படுத்தியதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில், இறக்காமம் பகுதியைச் சேர்ந்த மௌலவி ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவத்தின் பிரதான சந்தேகநபரான அவர் பிரதேசத்திலிருந்து தப்பிச் சென்றிருந்த நிலையில், பின்னர் சட்டத்தரணி ஒருவரின் ஊடாக அம்பாறை நீதவான் நீதிமன்றத்தில் சரணடைந்துள்ளார்.

இதையடுத்து, அவர் ஜூன் 3ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ளார்.

மேலும், பிரதான சந்தேக நபருக்கு உதவியதாகக் கூறப்படும் மற்றொரு 21 வயதுடைய மௌலவியும் ஏற்கனவே கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (அ)

# சட்டவிரோத மதுபான விற்பனையில் ஈடுபட்ட பெண் வியாபாரி சிக்கினார்!

மட்டக்களப்பு, ஜூன். 02
கல்குடா பொலிஸ் பிரிவிலுள்ள யூனியன்கொலனி பிரதேசத்தில் சட்டவிரோதமாக பௌர்ணமி தினத்தில் மதுபான வியாபாரத்தில் ஈடுபட்டுவரும் வீடு ஒன்றை முற்றுகையிட்ட பொலிஸார், அங்கிருந்து 72 பியர் ரின்கள், 25 கால் போத்தல் கொண்ட மதுபான போத்தல்களை மீட்டதுடன் 42 வயதுடைய பெண் வியாபாரி ஒருவரை கைது செய்துள்ளனர்.

பொலிஸ் புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த தகவல் ஒன்றினையடுத்து போதை ஒழிப்பு பிரிவு பொறுப்பதிகாரி உப பொலிஸ் பரிசோதகர் வை.விஜயராஜா தலைமையிலான குழுவினர் குறித்த வீட்டை முற்றுகையிட்டனர்.

இதன் போது சட்டவிரோத மதுபான வியாபாரத்தில் ஈடுபட்ட பிரபல வியாபாரியான 42 பெண் ஒருவரை கைது செய்ததுடன் பியருடனான 72 பியர் ரின்கள், கால் போத்தல்கள் கொண்ட மதுபானத்துடனான 25 போத்தல் மதுபானங்களை மீட்டனர். (அ)

# விபத்தில் சிக்கிய இளைஞரை காப்பாற்றிய சம்பிக்க ரணவக்க

கொழும்பு, ஜூன் 01
ரிதிகம-குருநாகல் வீதியின் கரந்தகொல்ல பகுதியில் இடம்பெற்ற விபத்தொன்றில் படுகாயமடைந்து உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த இளைஞர் ஒருவரை, முன்னாள் அமைச்சர் பாட்டாலி சம்பிக்க ரணவக்க உடனடியாக மீட்டு வைத்தியசாலையில் சேர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

குறித்த பகுதியில் மோட்டார் சைக்கிள் விபத்தொன்றுக்குள்ளான தம்பதியினரில், இளைஞர் ஒருவர் வீதியோரத்தில் மிகவும் ஆபத்தான நிலையில் விழுந்து கிடந்துள்ளார்.

இதன்போது, அந்த வீதி யூடாகப் பயணித்துக் கொண்டிருந்த முன்னாள் அமைச்சர் பாட்டாலி சம்பிக்க ரணவக்க, உடனடியாகத் தனது வாகனத்தை நிறுத்தி, காயமடைந்தவர்களை மீட்க முன்வந்துள்ளார்.

சம்பவ இடத்திற்குச் சென்ற முன்னாள் அமைச்சர், உடனடியாகத் தனது வாகனத்திலிருந்து இறங்கி, ஆபத்தான நிலையிலிருந்த இளைஞனைத் தனது உத்தியோகபூர்வ வாகனத்திலேயே ஏற்றி, மிக விரைவாக அருகில் உள்ள மருத்துவமனைக்கு அனுப்பி வைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளார். (அ)

# மஸ்கெலியாவில் மண்மேடு விழுந்து ஒருவர் உயிரிழப்பு!

கொழும்பு, ஜூன். 02
மஸ்கெலியா, கிளன்டில் தோட்டம் பகுதியில் மண்மேடு ஒன்று சரிந்து விழுந்த விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கிளன்டில் தோட்டம் பகுதியைச் சேர்ந்த 41 வயதுடைய நபர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சம்பந்தப்பட்ட நபர் தனது வீட்டுக்கு அருகில் மற்றுமொரு கட்டடத்தை நிர்மாணிப்பதற்காக மண்ணை அகற்றிக் கொண்டிருந்தபோதே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளார் என்று முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## குற்றம் சாட்டப்பட்டவர்க...

ஏனைய குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக பொதுச் சொத்துச் சட்டத்தின் கீழ் வழக்கை நடத்துவதற்கு எந்தவொரு சட்ட ரீதியான தடையும் இல்லை என்று அவர் தனது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த வழக்கு 2016 மார்ச் 31 அன்று நடைபெற்ற திறைசேரி பிணைமுறி ஏலத்துடன் தொடர்புடையதாகும். இதில் முன்னாள் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க, மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரன், பெர்பெச்சுவல் ட்ரெஷரீஸ் நிறுவனம், நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி அர்ஜுன் அலோசியஸ் மற்றும் ஜெப்ரி அலோசியஸ் உட்பட 10 பேருக்கு எதிராக சட்டமா அதிபர் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்திருந்தார்.

பெர்பெச்சுவல் ட்ரெஷரீஸ் என்பது ஒரு நிறுவனமே தவிர, ஒரு தனிநபர் அல்ல என்பதால், அதற்கு எதிராக பொதுச் சொத்துச் சட்டத்தின் கீழ் வழக்குத் தொடர முடியாது என பிரதிவாதிகள் தரப்பு சட்டத்தரணிகள் ஆரம்ப கட்ட ஆட்சேபனையை எழுப்பினர்.

இதனை ஏற்றுக்கொண்ட ட்ரயல்-அட்-பார் நீதிமன்றம், 2021 டிசெம்பரில் ஏனைய குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகளையும் முன்னோக்கி கொண்டு செல்ல முடியாது என தீர்ப்பளித்தது.

இந்தத் தீர்ப்பை எதிர்த்து சட்டமா அதிபர் முதலில் மேன்முறையீட்டு நீதிமன்றத்திலும், பின்னர் உயர் நீதிமன்றத்திலும் மேல்முறையீடு செய்தார். இந்தத் தீர்ப்பின் மூலம், 2021 இல் தள்ளுபடி செய்யப்பட்ட பொதுச் சொத்துச் சட்டத்தின் கீழான குற்றச்சாட்டுகள் மீண்டும் உயிர்பெற்றுள்ளன.

நீண்ட காலமாக தாமதிக்கப்பட்டு வந்த பிணைமுறி மோசடி வழக்கு விசாரணைகள் தொடர்ந்து நடைபெறுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ)

## ஆசிரியர் போட்டிப் பரீட்சை...

2,700 ரூபாய் வசூலிக்கப்பட்டுள்ளது. அரச சேவையில் உள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் வேலையற்ற பட்டதாரிகள் உட்பட 1 இலட்சத்து 50,000 இற்கும் மேற்பட்டோர் இப்பரீட்சைக்கு விண்ணப்பித்திருந்தனர்.

இதன் மூலம் பரீட்சைக் கட்டணமாக மட்டும் மொத்தம் 44 கோடி 21 இலட்சத்துக்கும் அதிக தொகை வசூலிக்கப்பட்டுள்ளது. எனினும் இவர்களில் 23,000 பேர் என்ற வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையினரே ஆசிரியர் சேவைக்கு இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

கடந்த காலங்களில் இப்பரீட்சைக்குத் தோற்றும் அனைத்து பரீட்சார்த்திகளுக்கும் ஒரே மாதிரியான வினாத்தாள்கள் வழங்கப்பட்டன. ஆனால் இம்முறை அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு ஒரு வினாத்தாள்களும், வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேறொரு வினாத்தாளும் வழங்கப்பட்டுள்ளது. இந்த வினாத்தாள்கள் தயாரிப்பில் அரசாங்கம் பாரிய சமநிலையற்ற தன்மையை உருவாக்கியுள்ளது.

மேலும், பட்டதாரிகளுக்கு வழங்கப்பட்ட வினாத்தாள்களில் உள்ள சில வினாக்கள் தீர்ப்பதற்கு மிகவும் கடினமானதாக அமைந்திருந்தன. ஆனால் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட வினாத்தாள்கள் மிகவும் இலகுவாக விடையளிக்கக் கூடிய வகையில் அமைக்கப்பட்டிருந்தன.

கடந்த காலங்களில் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் முன்னெடுத்த போராட்டங்கள் ஜனாதிபதியின் பேச்சு வார்த்தையை தொடர்ந்து கைவிடப்பட்டது. எனவே அவர்களுக்கு ஏதேனும் ஒரு சலுகையை வழங்குவதற்காக ஆசிரியர் பரீட்சை வினாத்தாள்களில் இவ்வாறான நெகிழ்வான போக்கு கடைப்பிடிக்கப்பட்டதா என்ற சந்தேகம் எழுகிறது-என்றார். (அ)

## எபோலா, மூளைக்காய்ச்சல்...

நடவடிக்கை எடுத்து வருவதாகவும், இதற்காகப் பொது மக்களின் ஒத்துழைப்பை எதிர்பார்ப்பதாகவும் குறிப்பிட்டார்.

அத்துடன், எபோலா நோய் தொடர்பாக தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவு விசேட கவனம் செலுத்தியுள்ளதுடன், அது தொடர்பான தேவையான அறிவுறுத்தல்கள் சுகாதாரப் பிரிவினருக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

சில ஆபிரிக்க நாடுகளில் தான் எபோலா முதன்முதலில் கண்டறியப்பட்டது. அதன் பின்னர் உலக சுகாதார ஸ்தாபனம் இதனை ஒரு அவசர நிலைமையாக அறிவித்தது.

அது முதல், சுகாதார அமைச்சின் நோய் விஞ்ஞான பிரிவு இது குறித்துத் தொடர்ச்சியாகக் கவனம் செலுத்தி, எமது சுகாதாரக் கட்டமைப்புக்குத் தேவையான அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளது. அதற்கமைய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

அடுத்ததாக, கடந்த நாள்களில் பதிவான மெனிஞ்சைடிஸ் நோய் குறித்து, அது கண்டறியப்பட்ட முதல் நாளிலிருந்தே கவனம் செலுத்தி, அதனைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

அதனால்தான், கடந்த நாள்களில் நடைபெற்ற தன்சல்களில் தேநீர் போன்ற சூடான பானங்களை வழங்குமாறு நாங்கள் கூறியிருந்தோம். எனினும், ஓரளவுக்கு அதனைக் கட்டுப்படுத்துவதற்குச் சுகாதாரப் பிரிவினர் செயல்பட்டுள்ளனர்.

இந்த அளவிற்கு நோய் கட்டுப்படுத்தப்பட்டிருந்தாலும், இதனை அலட்சியமாக இருந்துவிட வேண்டாம்-என்றார். (அ)

# தன்னிச்சையாக எரிபொருள் விலையை அதிகரித்தது அரசு

### உதய கம்மன்பில குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 02

உலக சந்தையில் விலை அதிகரிக்கும் போதும் இலங்கையில் விலை அதிகரிக்கிறது, மறுபுறம் உலக சந்தையில் விலை குறையும் போதும் இலங்கையில் விலை அதிகரிக்கிறது. அதிகரிக்கும் போதும் அதிகரிக்கும், குறையும் போதும் அதிகரிக்கும் விசித்திரமான விலை சூத்திரம் இலங்கையில் மட்டுமே உள்ளது என பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவர். உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்

ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்

அவர் மேலும் தெரிவிக்கையில்-

2022 இல் உலகப் போர்கள் இரண்டுக்கு மத்தியில் உலக சந்தையில் எரிபொருள் விலை வரலாற்றில் இல்லாதவாறு அதிகரித்து, அதேபோன்று டொலரின் மதிப்பு 371 ரூபாய் வரை அதிகரித்திருந்த பின்னணியில், பெற்றோலுக்கு நிர்ணயிக்கப்பட்ட விலையை விட தற்போதைய விலை 35 ரூபாய் மட்டுமே குறைவு. இந்த விலை அதிகரிப்பு அறிவுக்குப் புறம்பானது, அநியாயமானது. 2026 ஏப்ரல் மாதத்தில் உலக சந்தையில் எரிபொருள் விலை அதிகரித்ததால் நமது நாட்டில் எரிபொருள் விலையை அதிகரித்ததை புரிந்து கொள்ள முடிகிறது.

ஆனால் இப்போது நிலைமை வேறு. 2026 ஏப்ரல் 29ஆம் திகதி பிரெண்ட் கச்சா எண்ணெய் ஒரு பீப்பாய் விலை 114 டொலர்களாக இருந்தது. இன்று 30 டொலர்களால் குறைந்துள்ளது. இவ்வளவு பெரிய விலை வீழ்ச்சி இருக்கும் போதுதான் அரசாங்கம் இந்த விலை அதிகரிப்பை செய்துள்ளது.

இது ஒரு விசித்திரமான விலைச் சூத்திரம் அல்லவா? இலங்கையில் மட்டும் எவ்வாறு விலை அதிகரித்தது என்பதை நாட்டு மக்களுக்குத் தெளிவாக விளக்க வேண்டும். நாம் டீசல் உட்பட சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய்களை மத்திய கிழக்கிலிருந்து அல்ல, சிங்கப்பூரிலிருந்து தான் இறக்குமதி செய்கிறோம். எனவே, ஹோர்முஸ் நீரிணை வழியாகவோ அல்லது செங்கடல் வழியாகவோ வரும் கப்பல்களுக்கு விதிக்கப்படும் சிறப்புப் பாதுகாப்பு வரிகள் எதுவும் நமது பெற்றோல் மற்றும் டீசல் கப்பல்களுக்குப் பொருந்தாது. இந்த எண்ணெய் விலை அதிகரிப்பை உடனடியாக நீக்கிவிட்டு, உலக வரலாற்றிலேயே மிக அதிக விலைக்கு எண்ணெய் வாங்கியதால் ஏற்பட்ட நஷ்டத்தை பெலவத்தை கட்சி நிதியிலிருந்து ஈடு செய்யுமாறு நாம் ஜனாதிபதியைக் கேட்டுக்கொள்கிறோம்-என்றார். (அ)

## ரூ.10 கோடிக்கு மேற்பட்ட...

இளையதம்பி சுகுமார் (வயது 41) என்ற நபரே தனது மனைவி மற்றும் பிள்ளைகளுடன் சிங்கப்பூர் தப்பிச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த நபர் கடந்த 15 வருடங்களுக்கு மேலாக வவுனியாவில் பல நகைக் கடைகளுக்கு நகைகளை விநியோகம் செய்து வந்ததுடன், நகைக் கடைகளுடன் கொடுக்கல் வாங்கல் செயற்பாடுகளிலும் ஈடுபட்டு வந்திருந்தார்.

இவர் தொடர்பில் தகவல் தெரிந்தோர் கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவு பொலிஸாருக்கோ அல்லது 0774101802 எனும் தொலைபேசி இலக்கத்துக்கோ தொடர்பு கொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவுப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)

## பொருளாதார நட்ட சுமையை...

கிடைத்தது. ஆனால் இன்று அரசாங்கம் எரிபொருள் விலையை உயர்த்த வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகியுள்ளது. தரமற்ற நிலக்கரியை இறக்குமதி செய்ததால் ஏற்பட்ட நட்டத்தை ஈடுசெய்ய, மின்சார உற்பத்திக்காக நாளொன்றுக்கு 7 முதல் 8 லட்சம் லீற்றர் வரையிலான எரிபொருளை மேலதிகமாக வழங்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. உலகிலேயே மிகக் கூடிய விலைக்கு எரிபொருளை வாங்கியதன் விளைவாக, இறுதியாக மக்கள் மீதே இந்த நட்டம் சுமத்தப்பட்டுள்ளது.

மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதில் தனது கட்சி உறுதியாக இருக்கிறது. மாகாண சபைகளின் நிதி நிர்வாகம் மற்றும் அதிகாரம் தற்போது ஜனாதிபதியின் 9 அரசியல் பிரதிநிதிகளிடம் முடங்கிக் கிடக்கிறது. அரசியல் பிரதிநிதிகளிடம் இந்த அதிகாரங்களை வழங்குவதை விடுத்து, மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் மக்கள் பிரதிநிதிகளிடம் வழங்கினால் மட்டுமே அவர்கள் மக்களுக்குப் பொறுப்பு கூறுவார்கள்.

எந்தவொரு தேர்தலையும் எதிர்கொள்ள நாங்கள் தயாராகவே இருக்கிறோம். தற்போதைய நிலையில் அனைத்து எதிர்க்கட்சிகளும் கிராம மட்டங்களுக்குச் சென்று மக்களுக்காகப் பணியாற்ற வேண்டும். விளையாட்டுப் போட்டிக்கு முன்னதாக அனைவரும் பயிற்சி எடுப்பது போல, தற்போது நாங்கள் தனித்து பயணித்துக் கொண்டிருக்கிறோம். தேர்தல் நெருங்கும் இறுதி நேரத்தில் மட்டுமே கூட்டணி குறித்துப் பரிசீலிக்கப்படும்-என்றார். (அ)

## சாலேயின் தடுப்புக்காவல்...

(தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தின் பிரிவு 9(1) இன் படி இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்கள் சம்பவத்தின் பிரதான சூத்திரதாரினெ சட்டமா அதிபர் திணைக்களத்தால் குற்றம்சாட்டப்பட்டுள்ள சுரேஷ் சாலே பயங்கரவாத நடவடிக்கைகள் குறித்த முன் அறிவுடன், இனங்கள் மற்றும் மதங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்தைச் சீர்குலைக்க சதித்திட்டம் தீட்டியதாகவும், பொது அமைதி மற்றும் தேசியப் பாதுகாப்புக்கு ஆபத்தை விளைவித்ததாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் பெப்ரவரி மாதம் 25 ஆம் திகதி பேலியகொடையில் கைது செய்யப்பட்ட சுரேஷ் சாலே, ஏற்கனவே சுமார் 80 நாள்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளதோடு குறித்த வழக்கில் அவரை 3ஆவது சந்தேக நபராகப் பெயரிட சட்டமா அதிபர் திணைக்களம் நடடிவடிக்கை எடுத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## 3 மாதங்களில் 5 தடவைகள்...

இதன்படி, மே 31 நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் 5ஆவது முறையாகவும் எரிபொருள் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

கடந்த பெப்ரவரி மாதம் முதலாம் திகதி நிலவிய விலைகளுடன் ஒப்பிடுகையில், இந்த நான்கு மாத காலப்பகுதிக்குள் மண்ணெண்ணெய் விலையானது 56.6 வீதத்தினால் (103 ரூபாய்) அதிகரித்து, அதிக சதவீத விலை உயர்வைப் பதிவு செய்துள்ளது.

அத்துடன் ஒக்டேன் 92 பெற்றோல் 48.6 வீதத்தினாலும், சுப்பர் டீசல் 48 வீதத்தினாலும், ஒட்டோ டீசல் 46.9 வீதத்தினாலும் உயர்வடைந்துள்ளன. (அ)

## மாகாண சபை தேர்தலை

நடவடிக்கை எடுக்கவேண்டும் என அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அனைத்து அரசியல் கட்சிகளும் பழைய மாவட்ட தேர்தல் முறையின் கீழ் தேர்தலை நடத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை என்பதால், மக்கள் பிரதிநிதிகளுடன் மாகாண சபைகளை மீண்டும் செயற்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு ஆளுநர்களின் சங்கம் அரசாங்கத்தைக் கேட்டுள்ளது.

கடந்த 2017 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குள் பல சந்தர்ப்பங்களில் மாகாண சபை உறுப்பினர்களின் பதவிக்காலம் நிறைவடைந்ததையடுத்து, மக்கள் பிரதிநிதிகள் எவருமில்லாத சபைகளே தற்போது மாகாண மட்டத்தில் செயற்பட்டு வருகின்றன.

இதன் காரணமாக, ஆளுங்கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள் மாத்திரம் மாகாண சபையின் அன்றாட காரியங்களில் தலையிட்டு வருவதாக ஆளுநர்களின் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அரசாங்கத்திலோ அல்லது அரச சேவையிலோ எந்தவொரு பதவியையும் வகிக்காத, கட்சியின் செயலாளராக மாத்திரம் பதவி வகிக்கும் ரில்வின் சில்வா, யாழ்ப்பாணத்தில் வைத்து மாகாண சபை தேர்தல் இந்த ஆண்டில் நடத்தப்பட மாட்டாது என அண்மையில் தெரிவித்திருந்தார்.

இருப்பினும், எந்தவொரு கட்சியின் செயலாளருக்கும் மாகாண சபைகளின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் அதிகாரம் கிடையாது என ஆளுநர்களின் சங்கம் திட்டவட்டமாகக் குறிப்பிட்டுள்ளது. (அ)

## அனுமதியின்றி தேர்தல்...

முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்திருந்த கருத்துக்களை மனோ கணேசன் தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

தனக்குத் தெரிந்தவரை, இத்தகைய நிதியை வேறு செலவினத் தலைப்புகளுக்கு மாற்றுவதற்கோ அல்லது மறுஒதுக்கீடு செய்வதற்கோ பாராளுமன்றம் எந்தவொரு அனுமதியையும் வழங்கவில்லை என அவர் வலியுறுத்தியுள்ளார்.

ரில்வின் சில்வாவால் கூறப்பட்ட இந்த அறிக்கை துல்லியமானது எனின், அது பாராளுமன்ற அனுமதியின்றி பொது நிதியை அங்கீகரிக்கப்படாத வகையில் பயன்படுத்தியமையைக் குறிக்கலாம் என அவர் எச்சரித்துள்ளார்.

எனவே, தேர்தல் நிதியை மாற்றுவது, மறுஒதுக்கீடு செய்வது அல்லது செலவிடுவது போன்ற நடவடிக்கைகள் பாராளுமன்ற அங்கீகாரம் மற்றும் நிதி விதிமுறைகளை மீறி நடந்துள்ளதா என்பதை அரச நிதி பற்றிய குழு ஆராய்ந்து பார்க்கவேண்டும் என வலியுறுத்தியுள்ளதோடு இந்த குழு தனது அதிகார வரம்பிற்குள் இதற்குரிய தகுந்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு

# நீதித்துறையில் நிர்வாகத்துறை தலையீடு மக்களின் நம்பிக்கையை பாதிக்கக்கூடும்!

## யாழ். சட்டத்தரணிகள் சங்கம் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஜூன். 02

நீதித்துறை அதிகாரிகளின் திடீர் மற்றும் விளக்கமற்ற இடமாற்றங்களும், அவற்றில் நிர்வாகத்துறையினரின் தலையீடும், நீதித்துறையின் மீதான மக்களின் நம்பிக்கையை பாதிக்கக்கூடும் என்று யாழ்ப்பாணம் சட்டத்தரணிகள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

நீதித்துறையின் செயற்பாடுகளில் தலையீடு இடம்பெற்றுள்ளது என்று சிறிதளவு தோற்றமளிப்பதுகூட மிகக் கடுமையான விடயமாகும் என்றும் அந்தச் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

யாழ்ப்பாண மேல்நீதிமன்ற நீதிபதி ஏ.ஜி.அலெக்ஸ்ராஜாவின் இடமாற்றம் தொடர்பாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு அனுப்பியுள்ள கடிதத்திலேயே அந்தச் சங்கம் இவ்வாறு தெரிவித்துள்ளது.

அந்தக் கடிதத்தில் உள்ளதாவது-

யாழ்ப்பாண மேல்நீதிமன்றத்திலிருந்து பதுளை சிவில் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றத்துக்கு ஏ.ஜி. அலெக்ஸ்ராஜா இடமாற்றம் செய்யப்பட்டமை தொடர்பாக எங்களது முழுமையான அதிர்ச்சியையும் நம்பிக்கையின்மையையும் வெளிப்படுத்துவதற்காக இந்தக் கடிதம் எழுதப்படுகிறது.

அலெக்ஸ்ராஜா கடந்த ஏப்ரல் மாதம் 22ஆம் திகதி மேல்நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டார். பதவியேற்ற ஒரு மாதத்துக்குள் அவர் இடமாற்றம் செய்யப்பட்டிருப்பது, அந்த இடமாற்றத்துக்குப் பின்னால் புறக்காரணங்கள் இருக்கலாம் என்ற சந்தேகங்களை எழுப்பியுள்ளது.

எங்களது உறுப்பினர்களிடமிருந்து நம்பகமான தகவல்களின் அடிப்படையில், வட மாகாண ஆளுநருக்கு எதிராக நீதிபதி சில உத்தரவுகளை வழங்கியிருந்தமையே இந்த இடமாற்றத்துக்குக் காரணமாக இருக்கலாம் என அறிகிறோம்.

அந்த வழக்குகளில் ஆளுநர் பிரதிவாதியாகப் பெயரிடப்பட்டிருந்தார்.

மேலும், வடக்கு ஆளுநர் உங்கள் அரசாங்கத்தின் அமைச்சர் உட்பட சில அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு தலையீட்டை நாடினார் என்றும் நாங்கள் நம்பத்தகுந்த முறையில் அறிந்துள்ளோம்.

நீதித்துறை சேவைகள் ஆணைக்குழுவின் நீதித்துறை அதிகாரிகளை இடமாற்றம் செய்யும் அதிகாரத்தை நாங்கள் முழுமையாக ஏற்றுக்கொள்கிறோம்.

எனினும், நீதித்துறை அதிகாரிகளின் திடீர் மற்றும் விளக்கமற்ற இடமாற்றங்களும், அவற்றில் நிர்வாகத் துறையினரின் தலையீடும், நீதித்துறையின் மீதான மக்களின் நம்பிக்கையை பாதிக்கக்கூடும் என்பதை ஜனாதிபதி புரிந்துகொள்வார்.

நீதித்துறையின் செயற்பாடுகளில் தலையீடு இடம்பெற்றதாக சிறிதளவு தோற்றமளிப்பதுகூட மிகக் கடுமையான விடயமாகும். நாட்டின் தலைவராக, இத்தகைய தலையீடுகளுக்கு எந்தவித சகிப்புத்தன்மையும் இருக்கக்கூடாது என்பதை உறுதி செய்யும் பொறுப்பு உங்களுக்குள்ளது.

இந்த விடயத்தை மிக உயர்ந்த முன்னுரிமையுடன் விசாரிக்குமாறு வலியுறுத்துகிறோம். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை நேரில் விளக்குவதற்காக உங்களைச் சந்திக்கும் வாய்ப்பையும் வழங்க வேண்டும் என்றும் கோருகின்றோம் - என்றுள்ளது. (அ)

# காங்கேசன்துறை-நாகபட்டினம் கப்பல் சேவை மீண்டும் ஆரம்பம்!

யாழ்ப்பாணம், ஜூன். 02

காங்கேசன்துறைக்கும் நாகப்பட்டினத்துக்கும் இடையில் பயணிகள் போக்குவரத்து சேவையில் ஈடுபடும் சுபம் நிறுவனத்தின் சிவகங்கை கப்பல் நாளை புதன்கிழமை தொடக்கம் மீண்டும் சேவையில் ஈடுபடும் என அந்த கப்பல் நிறுவனத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் கே.எம்.ஜெயசீலன் தெரிவித்துள்ளார்.

கடலில் ஏற்பட்ட அசாதாரண காலநிலை காரணமாக கடந்த சில வாரங்களுக்கு முன்னர் குறித்த கப்பல் பழுதடைந்த நிலையில் போக்குவரத்து சேவை இடைநிறுத்தப்பட்டது.

இந்நிலையில் குறித்த கப்பல் போக்குவரத்து நாளை புதன்கிழமை ஆரம்பமாகின்ற நிலையில், கப்பல் போக்குவரத்து வழமை போல் செவ்வாய் தவிர்ந்த ஏனைய ஆறு நாள்களும் இடம்பெறும் என தெரிவிக்கப்படுகிறது.

எனவே றறற.ளயடைளரடிாயஅ.உழஅ என்ற இணைத்தளத்திற்குள் பிரவேசிப்பதனூடாகவோ அல்லது 02122 24647, 0117642117 என்ற இலக்கங்களுக்கு அழைப்பு மேற்கொள்வதன் மூலமாகவோ பயணச்சீட்டுகளை பதிவு செய்துகொள்ள முடியும் என மேலும் தெரிவிக்கப்படுகிறது. (அ)

# மழைக்கு பின் டெங்கு, சிக்குன்குனியா தொற்று நாட்டில் வேகமாக அதிகரிப்பு

கொழும்பு, ஜூன். 02

பருவமழை காரணமாக டெங்கு மற்றும் சிக்குன்குனியா தொற்றுகள் அதிகரித்து வரும் நிலையில், இரண்டு நாட்களுக்கு மேல் காய்ச்சல் நீடித்தால் பொதுமக்கள் உடனடியாக மருத்துவ ஆலோசனையைப் பெற்று, பொருத்தமான இரத்தப் பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டும் என விசேட மருத்துவர் மஹேஷக விஜயவர்தன எச்சரித்துள்ளார்.

இந்த ஆண்டு ஏற்கனவே பல்லாயிரக்கணக்கான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என்றும், இதில் மேல் மாகாணம், குறிப்பாக கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களிலேயே அதிகளவிலான தொற்றாளர்கள் கண்டறியப்பட்டுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், கடந்த சில வருடங்களாகக் குறைவடைந்திருந்த சிக்குன்குனியா தொற்றுகளும் தற்போது மீண்டும் அதிகரித்து வருவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது குறித்து விசேட மருத்துவர் மஹேஷக விஜயவர்தன மேலும் தெரிவிக்கையில்-

டெங்கு மற்றும் சிக்குன்குனியா ஆகிய இரண்டுமே "ஏடிஸ்" (**Aedes**) நுளம்புகள் மூலம் பரவுகின்றன.

காய்ச்சல், தலைவலி, உடல்வலி, மூட்டு வலி மற்றும் தோலில் ஏற்படும் தடிப்புகள் போன்ற ஒத்த அறிகுறிகளுடன் இவை ஆரம்பிப்பதால், ஆரம்ப கட்டத்திலேயே நோயைக் கண்டறிவது கடினமாக உள்ளது.

டெங்கு தீவிரமடைந்து "டெங்கு இரத்தப்போக்கு காய்ச்சலாக" மாறினால் அது உயிருக்கு ஆபத்தாக முடியும்.

காய்ச்சல் குறையத் தொடங்கும் போதே இந்த நோயாளிகள் அதிகளவில் சோர்வடைவர். எனவே, கடுமையான சோர்வு, வயிற்று வலி மற்றும் கைகள் அல்லது கால்கள் குளிர்ச்சியடைதல் போன்ற அறிகுறிகளை ஒருபோதும் அலட்சியப்படுத்தக்கூடாது-என்றார். (அ)

# ஞானசார தேரருக்கு எதிரான வழக்கு விசாரணை ஒத்திவைப்பு

கொழும்பு, ஜூன். 02

இஸ்லாமிய மார்க்கத்துக்கு அவதூறு ஏற்படுத்தும் வகையில் கருத்து வெளியிட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் பொதுபல சேனா அமைப்பின் பொதுச்செயலாளர் கலகொடஅத்தே ஞானசார தேரருக்கு எதிரான வழக்கின் விசாரணைத் திகதியை நிர்ணயிப்பதற்காக எதிர்வரும் ஜூன் மாதம் 26ஆம் திகதி அழைக்குமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இஸ்லாமிய மார்க்கத்துக்கு அவதூறு ஏற்படுத்தும் வகையில் கருத்து வெளியிட்டதாக கூறி சட்டமா அதிபரால் அவருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்கு நேற்று பரிசீலிக்கப்பட்ட போது, பிரதிவாதியான ஞானசார தேரர் நீதிமன்றத்தில் முன்னிலையாகியிருந்தார்.

இதனைத் தொடர்ந்து, பூர்வாங்க வழக்கு விசாரணையை நிறைவு செய்த மேல் நீதிமன்ற நீதிபதி புத்திக சி. ராகல, வழக்கின் விசாரணைத் திகதியை நிர்ணயிப்பதற்காக அதனை ஜூன் மாதம் 26ஆம் திகதி அழைக்குமாறு உத்தரவிட்டார். (அ)

# பொருளாதார கட்டமைப்பு நாட்டில் சீர்குலைந்துள்ளது!

## கட்டுமானச் சங்கம் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூன். 02

இலங்கை அரசாங்கத்தின் தற்போதைய பொருளாதாரக் கொள்கைகள், மின்கட்டண உயர்வு மற்றும் புதிய வரிவிதிப்புகள் காரணமாக நாட்டின் ஒட்டுமொத்த மக்களும், வர்த்தகர்களும் வாழ முடியாத அளவுக்குப் பாதாளத்தில் தள்ளப்பட்டுள்ளதாக இலங்கை கட்டுமானச் சங்கத்தின் தலைவர் சுசந்த லியனாராச்சி தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வெசாக் பௌர்ணமி தினத்தைக் கொண்டாடுவதற்காகக் கொழும்புக்கு வந்த மக்கள், தங்களது வாகனங்களுக்கு எரிபொருள் நிரப்பிக் கொண்டு வீடு திரும்பும்போது எரிபொருள்களின் விலை மேலும் உயர்த்தப்பட்டுள்ளது. மக்களுக்கு நிம்மதியாக ஒரு பண்டிகையைக் கூட கொண்டாட வழிவகை செய்யாத ஒரு அரசாங்கமே நாட்டில் இயங்கி வருகிறது.

தேர்தல் மேடைகளில் ஏறி, "எரிபொருள் விலையை 35 வீதமாக குறைக்க முடியும், மின்சாரக் கட்டணத்தை பாதியாகக் குறைக்க முடியும்" என ஜனாதிபதி உள்ளிட்ட தரப்பினர் நாட்டு மக்களை முற்றிலுமாக ஏமாற்றியுள்ளனர். ஆனால், இன்று நிலைமை தலைகீழாக மாறியுள்ளது.

எந்தவொரு சவாலையும் தாங்கக்கூடிய பொருளாதாரத்தை உருவாக்குவதாக அரசாங்கம் கூறுகிறது. ஆனால் இன்று நாட்டில் கைத்தொழிலாளர்கள், விவசாயிகள், வர்த்தகர்கள் என அனைத்துத் தரப்பினரும் அடுத்தடுத்து சவால்களையும் நட்டங்களையுமே எதிர்கொண்டு வருகின்றனர்.

டொலர் கையிருப்பில் ஏற்பட்ட குளறுபடிகள் மற்றும் முறையற்ற நிதி நிர்வாகம் காரணமாக நமது பொருளாதாரக் கட்டமைப்பு ஏற்கனவே சீர்குலைந்துள்ளது- என்றார். (அ)

# மகப்பேறு மருத்துவமனைகளில் புதிய பரிசோதனை அறிமுகம்!

கொழும்பு, ஜூன். 02

தாய் மற்றும் சேய் ஆரோக்கியத்தில் புதியதொரு மைல்கல்லை எட்டும் நோக்கில், நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து மகப்பேறு மருத்துவமனைகளிலும் "முத்திறன் ஒழிப்பு" திட்டம் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

நேற்று சுகாதார அமைச்சு விடுத்துள்ள உத்தியோகபூர்வ அறிக்கையில் இந்த விவரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

சுகாதார அமைச்சின் அறிவிப்பின்படி,

நேற்று முதல் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு மேற்கொள்ளப்படும் இரத்தப் பரிசோதனைகளில், தற்போது நடைமுறையிலுள்ள எச்.ஐ.வி. மற்றும் சிபிலிஸ் பரிசோதனைகளுடன் கூடுதலாக "ஹெபடைடிஸ் பி" வைரஸ் கண்டறிவதற்கான பரிசோதனையும் உள்ளடக்கப்படும்.

எச்.ஐ.வி மற்றும் சிபிலிஸ் தொற்றுகள் தாயிடமிருந்து குழந்தைக்குப் பரவுவதைத் தடுக்கும் "இரட்டை ஒழிப்பு" திட்டம் ஏற்கனவே வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டது.

இந்த வெற்றியைத் தொடர்ந்து; கடந்த 2019ஆம் ஆண்டில் உலக சுகாதார அமைப்பினால் இந்த மைல்கல்லை எட்டிய முதல் நாடுகளில் ஒன்றாக இலங்கை சான்றளிக்கப்பட்டதுடன், அன்று முதல் தொடர்ச்சியாக அந்த அந்தஸ்தையும் இலங்கை தக்கவைத்துள்ளது.

"இதன் அடுத்த கட்டமாகவே இந்த "முத்திறன் ஒழிப்பு திட்டம் தற்போது தொடங்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் அனைத்து கர்ப்பிணித் தாய்மார்களுக்கும் எச்.ஐ.வி மற்றும் சிபிலிஸ் ஆகியவற்றுடன் ஹெபடைடிஸ் பி பரிசோதனையும் செய்யப்படுவது உறுதி செய்யப்படும்.

இந்த நடவடிக்கை நாடளாவிய ரீதியில் உள்ள ஒவ்வொரு மகப்பேறு மருத்துவமனையிலும் முன்னெடுக்கப்படும் என சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# இலங்கை ஏற்றுமதி 6 வீதம் உயர்ந்து 1.38 பில்லியன் டொலர்களை எட்டியது!

கொழும்பு, ஜூன். 02

2026 ஏப்ரல் மாதத்தில் இலங்கை தனது வரலாற்றிலேயே மிக உயர்ந்த மாதாந்த ஏற்றுமதி வருவாயைப் பதிவுசெய்தது.

அதன்படி, அந்த மாதத்தில் நாட்டின் ஏற்றுமதி வருவாய் 1.38 பில்லியன் அமெரிக்க டொலர்களாக உயர்ந்து, ஆண்டுக்கு ஆண்டு வளர்ச்சியைப் பதிவு செய்ததாக இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை தெரிவித்துள்ளது.

இந்தச் சாதனை, நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குத் தொடர்ந்து ஆதரவளிக்கும் அதே வேளையில், வெளிப்புற சவால்களை எதிர்கொள்வதில் இலங்கை ஏற்றுமதியாளர்களின் மீள்திறனைப் பிரதிபலிக்கிறது என்று ஏற்றுமதி அபிவிருத்திச் சபை தலைவரும் தலைமை நிர்வாக அதிகாரியுமான மங்கள விஜேசிங்க குறிப்பிட்டார்.

பல்வேறு முக்கிய ஏற்றுமதித் துறைகளின் வலுவான செயல்பாடுகளால், 2026 ஏப்ரல் மாதத்தில் சரக்கு ஏற்றுமதி கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 9.8 வீதம் அதிகரித்து, 1,063.77 மில்லியன் அமெரிக்க டொலர்களாக உயர்ந்துள்ளது.

இதற்கிடையில், இந்த மாதத்தில் சேவை ஏற்றுமதி மூலம் கிடைத்த வருவாய் 317 மில்லியன் அமெரிக்க டொலர்களாக மதிப்பிடப்பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 02.06.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.